**ஏறாவூர்பற்று பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர்பற்று பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 3,189,344 பெறுமதியான 05 நிர்மாணங்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 07 நூலகங்களுக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 543,386 பெறுமதியான 1,575 புத்தகங்கள் மற்றும் விலை குறிப்பிடப்படாத 784 புத்தகங்களின் பெறுமதிகள் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நன்கொடைப் புத்தகங்களின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு யுனப்ஸ் தொண்டு நிறுவனத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 22 வகையான 42 பொருட்களின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடுகள் முடிவுற்றவுடன் இப்பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். | நன்கொடைச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 146,185,023 பெறுமதியான 03 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துப் பூர்வ ஆதாரம் பெறப்பட்ட சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட போதிலும் அதன் உண்மையான பெறுமதியை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக் கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ள வும் பதிவேடுகளில் பதிவுசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 24(1) | சபைக்கு சொத்தமான வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வீதிகளையும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | வீதிகளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | இல. 371(2)(ஆ) | சபையினால் கடந்த மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 7,514,755 மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | முற்பணக் கொடுப்பனவு களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | இல. 571(1),(2) & (3) | காலங்கடந்த வைப்புக்கள் தொகை ரூபா 14,645,166 தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் உரிய நபர்களுக்கு எழுத்துமூலம் | வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்ட அதற்கு பிற்பாடு வருமானத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 74,514,887 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 97,152,572 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,004,500 | 1,044,706 | 55,200 | 989,506 | 2,004,500 | - | - | 992,082 |
| வாடகை | 15,755,000 | 17,021,021 | 14,177,491 | 2,843,529 | 15,370,000 | 11,457,854 | 14,607,772 | 5,484,204 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 4,511,000 | 3,421,481 | 3,421,481 | - | 3,726,000 | 3,089,967 | 3,089,967 | - |
| ஏனைய வருமானம் | 8,874,500 | 10,409,074 | 10,409,074 | - | 50,712,000 | 57,159,616 | 58,159,616 | 2,609,529 |
| | 31,145,000 | 31,896,282 | 28,063,246 | 3,833,035 | 71,812,500 | 71,707,437 | 75,857,355 | 9.085.815 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| **(i)** | குத்தகைக்கு கடைகளைப் பெற்றுக்கொண்ட 52 குத்தகை நபர்களிடமிருந்தான நிலுவை ரூபா 1,604,779 தொகையினை உரிய நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நபர்களுக்கு நிலுவையை அறவிடுவதற்கு எழுத்து மூலம் உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ii)** | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை 18 கேள்வி மீதான குத்தகை வழங்கலிருந்து பெறவேண்டிய ரூபா 1,238,751 தொகை 1 தொடக்கம் 3 வருடங்களிற்கு இடைப்பட்ட வீச்சில் நிலுவையாக காணப்பட்டிருந்ததுடன் இத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்து மூலமான அறிவித்தல்களும், வருமான பரிசோதரர்கள் நேரடியாகவும் சென்று அறவிடுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் மீது அறவீடு செய்யப்பட வேண்டிய வியாபார உரிமக் கட்டணம் ரூபா 120,000 தொகையினை கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்யப்பட வேண்டிய உரிமக் கட்டணத் தொகை பற்றி எழுத்து மூலம் உரிய கம்பனிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டு உத்தரவுக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| **(இ)** | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 56,379,248 ஆகும். | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். | முத்திரைக் கட்டணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 1769 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மட்டுமே வரைய முடியும். எனினும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் கீழ்த்தளங்களை மாத்திரமே வரைய முடியும். எனினும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் 08 வரைபடங்கள் கீழ்த்தளம் உள்ளடங்கலாக மேல்த்தளங்களுக்கும் வரையப்பட்டு இச்சுற்றறிக்கைக்கு முரணான வகையில் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | தங்களினால் சுட்டிக்காட்டப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| வேறு அரச நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்ற வாகனங்கள், இழுவைப் | உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது | thfdq;fspd;; cupik khw;wk; nra;a eltbf;if எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெட்டிகள் மற்றும் பவுசர்கள் உள்ளடங்கலாக 19 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அவற்றை சபையின் பெயருக்கு சொத்தாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | |

**3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 30 ஆந் திகதியும் 2016/01 ஆம் இலக்கமும் கொண்ட சுற்றிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம், மாகாண மற்றும் உள்ளுராட்சி அதிகார சபைகள் வீதிகளை அமைக்கும் போது கிறவல் போடுதல் மற்றும் தற்காலிக பாதை அமைத்தல் போன்றவற்றை தவிர்த்து அதிக காலம் பயன்படுத்தக்கூடிய வகையில் காணப்பட்டது. அந்த வகையில் கார்பட் இடுதல், தார் பூசுதல் அல்லது கொங்கிரீட் இடுதலை மேற்கொள்ள வேண்டுமெனக் அச் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இதற்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 1,497,825 ஒப்பந்தப் பெறுமதியின் கீழ் 04 பாதைகளுக்கு கிறவலிடப்பட்டிருந்தன. | பொதுமக்களின் தேவைக்கேற்ப கௌரவ ஆளுநர் மற்றும் பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவர் மற்றும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் ஆகியோரின் அனுமதியுடன் இவ் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம், நீண்டகாலப் பாவனை கொண்ட பாதைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படுகின்ற 12 பதவிகளுக்கு 19 வெற்றிடங்களும், 01 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதனை சீர்செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணி தொடர்பாக சபையினால் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச்சென்ற ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 97,863 கடன் தொகையினை உரிய நபரிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையினை சபை எடுத்திருக்கவில்லை. | ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கப்படவுள்ளது. | ஊழியர் கடன் நிலுவை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2008 பெப்ரவரி 01ஆந் திகதியிடப்பட்ட 1534/18 ஆம் இலக்க வர்த்தமானியின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) இல்லாதொழியும் நாளிலிருந்து 03 மாத காலத்திற்கு முன்னர் விண்ணப்பித்திருக்க வேண்டும். எனினும், 61 எண்ணிக்கையான நிறுவனங்கள் உரிமம் காலாவதியாகியும் உரிமத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |